www.padippakam.com

களை அமைத்து மலையகத்தில் தொடர்ந்து வாழும் மக்கள் தமிழீழப் போராட்டத்திற்கு தமது தார்மீக ஆதரவை வழங்க வேண்டும்.

அதே சமயம் இனவாத அரசிற்கெதிராக சிறீலங்காவில் நடைபெறும் போராட்டங்களில் முற்போக்கு சக்திகளுடன் இணைந்தும் போராட வேண்டும். மலையக மக்கள் தம் உயிர் உத்தரவாதம், மொழி, கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றிற்கு எதிரான ஒடுக்குமுறை, பொருளாதார சுரண்டல் என்பவைகளை எதிர்த்து தனித்துவமாகப் போராடும் அதே வேளையில் இவர்களது தனித்துவத்தையும் உரிமையையும் உத்தரவாதம் செய்யும் முற்போக்கு சக்திகளை இனம் கண்டு சிங்கள இனவாத அரசிற்கு எதிராக சேர்ந்தும் போராட வேண்டும். இதுவே மலையகத்தில் தொடர்ந்தும் வாழ விரும்பும் மலையக மக்களுக்கு நாம் காட்டும் பாதையாகும்.

இரண்டாவதாக தமிழீழப் பிரதேசத்தில் குடியேறி வாழவிரும்பும் மலையக மக்களைப் பொறுத்தவரை அவர்களை நாம் பெரிதும் வரவேற்கின்றோம். தமிழீழத்தில் குடியேறும் மக்கள் உயிர் பாதுகாப்பு மாத்திரமின்றி பொருளாதார சமூக, அரசியலில் பாகுபாடு காட்டப்படாமல் சமமாக மதிக்கப் படுவார்கள் என்று உத்திரவாதமிடுகின்றோம். இம்மக்கள் சிங்கள இனவாத அரசிற்கு எதிராக தமிழீழ மக்கள் முன்னெடுக்கும் போராட்டத்தில் இரண்டறக் கலக்கவேண்டும். இதன் மூலம் ஓர் உறுதியான வாழ்வை இம்மக்கள் பெறுவார்கள்.

கடந்த காலத்தில் மேற்படி கொள்கையின் அடிப்படையிலேயே த. ஈ. ம. வி கழகம் செயற்பட்டதென்பதை இங்கு தெரிவிக்க விரும்புகின்றோம். த. ஈ. ம. வி சழகம், அகதிகள் புனர்வாழ்வு கழகம். காந்தீயம் என்பவற்றினூடாக மலையக மக்களை வடக்கு கிழக்கு பகுதிகளில் குடியேற்றுவதற்கு முன்னிற்கின்றது.

காந்தீயத்தின் ஒப்பற்ற சேவையின் காரணமாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் 20 ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. த. ஈ. போராட்டத்தை முன்னெடுக்கும் நாம் மலையக மக்களையும் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களையும் சகோதரத்துவமும்



சமத்துவமும் உள்ள சமூகங்களாக இணைந்து வாழ்வதற்கெடுத்த நடவடிக்கைகள் அரசின் மோசமான கெடுபிடிகளையும் மீறி வெற்றியளித்தன. இவ்வாறு குடியமர்த்தப்பட்ட மலையக மக்கள், மலையகத்தின் பாதுகாப்பற்ற பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள் என்பதும், மலையக மக்கள் செறிவாக வாழும் பகுதிகளிலிருந்து வரவழைக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. த. ஈ. வி. போராட்டத்தை முன்னெடுக்கும் நாம் மலையக மக்கள் குறித்து எமது வேலைத்திட்டங்களில் முக்கிய இடம் அளித்து வருகின்றோம் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

தொடர்ந்தும் வடக்கு கிழக்கு பகுதிகளில் குடியேறும் மலையக மக்கள் சமத்துவமும் சகோதரத்துவமும் உள்ள மக்களாக வாழ்வதற்கு உரிமை உடையவர்கள் என்று த.ஈ.வி. போராட்டத்தை முன்னெடுக்கும் நாம் உறுதி கூறுகின்றோம். அதே நேரத்தில் மலையகத்தில் வாழ்வதென உறுதி பெற்றுவிட்ட மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் அரசின் பாதுகாப்பு படைகளையோ அல்லது அரசியல்வாதிகளின் ஆசை வார்த்தைகளில் நம்பிக்கை கொள்ளாது சுயமாக தமக்கென பாதுகாப்பு படைகளை அமைத்து தம் உயிருக்கும் உடைமைக்கும் உத்ரவாதம் தேடிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு மலையக மக்களுக்கு பாதுகாப்பு குழுக்களை அமைத்து சிங்கள இனவாதத்திற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்பதில் ஆர்வமுடையவர்களாக நாம் இருக்கின்றோம். இன்றைய காலகட்டத்தில் மலையகத்தின் முற்போக்கு தாபனங்கள் மலையகத்தில் பாதுகாப்பு குழுக்களையமைத்து இன ஒடுக்கு முறைக்கெதிரான போராட்டத்தை முன்னெடுப்பது அவசியமான பணியாக இருக்கின்றது. இத்தகைய முற்போக்கு தாபனங்களோடு ஒத்துழைப்பதில் த.ஈ.ம.வி. கழகம் பெருமை கொள்கின்றது

மலையக மக்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் விமோசனம் ஒரு போராட்டத்தினூடாக மாத்திரமே சாத்தியமாகும் என்ற வரலாற்று நியதியை இந்த நெருக்கடி நிலையில் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது என்று வேண்டுகோள் விடுக்கின்றோம். மலையக மக்களின் விமோசனத்திற்கான போராட்டத்தை முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கும்படி மலையக மக்களையும் மலையக ஸ்தாபனங்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

படிப்பகம்

# தமிழீழத்தின்குரல்

## மலையக மக்கள் பற்றி....

தன் தலைவிதியை தனது சொந்தக் கரங்களில் எடுக்காத எந்த சமூகமும் உருப்படாது.

வெளியீடு-3

**தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம்**

செய்தித் தொடர்புத் திணைக்களம்

www.padippakam.com

## மலையகத்தில் வாழும் தமிழ் தோட்டத் தொழிலாளர் குறித்து தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலதிபர் தோழர் க. உமாமகேஸ்வரன் அவர்கள் விடுக்கும் அறிக்கை

சிங்கள இனவாத அரசின் கோரமான அடக்குமுறையினாலும் சுரண்டலினாலும் மிக நீண்ட காலமாக துயருற்று வாழும் சமூகம் மலையக தமிழ் தோட்டத் தொழிலாளர்களாகும் இம்மக்கள் கடந்த 1½ நூற்றாண்டுக்கு மேலாக பிரிட்டிஸ் ஆட்சியாளர்களாலும் அதன்பின் வந்த சிங்கள இனவாத ஆட்சியாளர்களாலும் ஒடுக்கப்பட்ட வரலாறு கண்ணீரால் எழுதப்படவேண்டிய ஒன்றாகும். கடந்த காலத்தில் சிங்கள இனவாத அரசிற்கு எதிராக வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் சிறுபான்மையினரின் உரிமைக்காகப் போராடிய பொழுது துர் அதிஷ்டவசமாக மலையக மக்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். இதற்கு வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு தலைமை கொடுத்த முதலாளித்துவ சக்திகளே காரணமாகும். அதே வேளையில் மலையக மக்களுக்கு தலைமை கொடுத்த முதலாளித்துவ சக்திகளும் ஏனைய சிறுபான்மை இனங்களோடு இணைந்து மலையக மக்களின் போராட்டங்களை முன்னெடுப்பதற்குப் பதிலாக இனவாத சிங்கள அரசுடன் சமரசம் செய்வதிலிலேயே கருத்தாக இருந்தார்கள். இந்த துர்ப்பாக்கியமான நிலையினால் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கும், வடக்கு கிழக்கு வாழ் தமிழ்மக்களுக்குமிடையில் அரசியல் ரீதியில் பேதமேற்படுத்தப்பட்டு வந்தமையை நாம் வேதனையுடன் நினைவு கூறுகின்றோம். மலையக மக்களுக்கு வடக்கு கிழக்கு வாழ் தமிழ்மக்களை விட மோசமான விசேடமான பிரச்சனைகள் உண்டு என்பது மனம் கொள்ளத் தக்கவை. மலையக மக்கள் குடியுரிமை அற்றவர்களாகவும், அரசியல் உரிமை பறிக்கப்பட்டவர்களாகவும் வாழ்வது, வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் எதிர்நோக்காத பிரச்சனைகளே.

மேலும் அவர்கள் சொந்த நிலம் அற்றவர்களாகவும், சிங்கள மக்களால் சூழப்பட்ட பாதுகாப்பற்ற பிரதேசங்களில் வாழ்வதும் கவனிக்கப்பட வேண்டிய தொன்றாகும். அத்துடன்



மிக மோசமான வாழ்க்கைத்தரம் கல்வி, வசதியின்மை என்பன மலையக மக்களின் பண்பாட்டில் ஒரு தாழ்வு மனப்பான்மையையும் அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை எல்லாம் நாம் வேதனையுடன் கவனிக்கவேண்டி இருக்கின்றது.

மலையக மக்களுக்குள்ள மேற்படி நிலைமைகள் அவர்கள் வடக்கு கிழக்கு வாழ் தமிழ்மக்களிலும் வேறுபட்டவர்கள் அல்லது தாழ்ந்தவர்கள் என்பதை வலியுறுத்துவதற்காக சுட்டிக்காட்டவில்லை. மலையக மக்களின் இச்சிக்கலான பிரச்னைகள் முதன்மைப்படுத்தப்பட்டு தீர்க்கப்படவேண்டுமென்பதே எமது குறிக்கோளாகும்

கடந்த காலத்தில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் போராட்டத்தை முன்னெடுத்த முதலாளித்துவ தலைமைகள் மலையக மக்களுக்கு இழைத்த துரோகத்தை நாம் மறந்துவிடவில்லை. ஆனால் இன்று தமிழீழப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் அனைத்து விடுதலை ஸ்தாபனங்களையும் அத்தகைய துரோகத் தலைமைகளின் வாரிசுகளாகக்காண முனையாதீர்கள் என்று மலையக மக்களுக்கும் மலையக ஸ்தாபனங்களுக்கும் த. ஈ. ம. வி கழகம் வேண்டுகோள் விடுக்கின்றது.

வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறையும் அதனால் அவர்களிடத்தில் ஏற்பட்டு வரும் அபரீதமான விடுதலை உணர்வும் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களையும் புடம் போட்டு வளர்த்து வந்துள்ளது.

இன்று மலையக மக்கள் மீதான அன்பும் அக்கரையும் போலியானதுமல்ல, சந்தர்ப்ப வசமானதுமல்ல. ஒடுக்கப்படும் இனங்களிடையேயுள்ள சர்வதேச உறவுகளின் வெளிப்பாடுகளே அது. வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களால் தமிழீழப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படும் பொழுது மலையக மக்கள் அடைந்த மோசமான கொடுமைகளையும் இன்னல்களையும் நாமறிவோம். இன்றைய நிலையில் த. ஈ வி போராட்டத்தை முன்னெடுக்கும் ஸ்தாபனங்கள், மலையக மக்கள் குறித்து எடுக்கும் நிலைப்பாடுகள், நிதானமாகவும் நீண்டகால தூர திருஷ்டியுடனும் இருக்கவேண்டும். மேலும் மலையக மக்களின் உணர்வையும் தேவையையும் புரிந்ததாக யதார்த்த நிலைமை



படிப்பகம்

களைக் கருத்தில் கொண்டதாகவும் கோட்பாடுகள் அமையவேண்டும். எம்மன விருப்பிற்கேற்ப மலையக மக்கள் குறித்து தமிழீழ விடுதலை தாபனங்கள் வாய்ச்சவாடல்கள் அடிக்கும் போக்குகள் மலையக மக்களை மேலும் மேலும் வதைக்கவே செய்யும்.

இன்று மலையக மக்கள் சிங்கள இனவாதத்தின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி இந்தியா செல்வதே ஒரே வழி என்ற மனப்போக்கிற்கு உள்ளாகி இருக்கின்றார்கள். இதனை மலையக பிற்போக்குத் தலைமைகளும் ஊக்குவிக்கின்றன. கடந்த 5 தலைமுறைக்கு மேல் இந்த நாட்டில் உழைக்கும் மக்களாக வாழ்ந்து இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக மாறிய மலையக மக்களின் தாயகம் இந்தியா அல்ல என்பதே எமது கருத்தாகும். மலையக மக்கள் இந்தியாவிற்கு குடிபெயர்ந்து செல்வதை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம்.

இம்மக்கள் எந்த நாட்டை வளமாக்க தம் உழைப்பை அர்ப்பணித்தார்களோ அந்த நாட்டிலேயே உரிமையும் சுதந்திரமாகவும் வாழவேண்டுமென்பதே எமது கருத்தாகும். மலையகமக்கள் தமது விடுதலைக்கான போராட்டத்தை இந்த மண்ணிலேயே நிகழ்த்த வேண்டும் என்று த. ஈ, ம. வி கழகம் மலையக மக்களையும் மலையக தாபனங்களையும் வேண்டுகின்றது.

மலையக மக்களின் போராட்டம் இரண்டு வகையில் நடைபெறக் கூடும்.

முதலாவதாக சிங்கள கிராமங்களால் சூழப்பெற்றுள்ள மலையக மக்கள் செறிவாக வாழும் பிரதேசத்திற்கு இடம் பெயரவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். பதுளை நுவரெலியா, ஹட்டன், தலவாக்கலை போன்ற பகுதிகளை மலையக மக்கள் தம் பாதுகாப்பு பிரதேசமாக மாற்றவேண்டும். செறிவான பிரதேசத்தில் வாழும் மலையக மக்கள் இப்பகுதிகளுக்கு சென்று குடியேற வேண்டும்.

இவ்வாறான பகுதிகளில் மலையக மக்கள் தம் பாதுகாப்பு கருதி சுய பாதுகாப்பு குழுக்களை ஏற்படுத்துதல் அவசியமாகும். மலையக மக்களின் உயிர், உடைமை, மானப்பாதுகாப்பு வழங்கப் படுவதற்கு இச்சுய பாதுகாப்பு குழுக்களே ஆதாரமாகும். இதற்கான உதவிகளையும் ஆலோசனைகளையும் நாம் வழங்குவோம். இவ்வாறு தமக்கென சுய பாதுகாப்பு குழுக்